**MCOP. 49 / 2023- PW1 .**

**திரு. ரகு , த/பெ.லட்சுமையா**

**நாள்:18.09.2025.**

**குறுக்கு விசாரணை 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் :**

எனக்கு **04.07.2022** அன்று விபத்து ஏற்பட்டது. விபத்து நடந்த உடன் நான் எந்த மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சைபெற்றேன் என்றால் குணம் மருத்துவமனையில் முதல் உதவிசிகிச்சை பெற்றேன். நான் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவு எண்.**TN70 A 5104** ஆகும். அது இருசக்கர வாகனம் ஆகும். அன்றைக்கு நான் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. நான் குணம் மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை எடுத்தற்கு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஆங்கிலம் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் மருத்துவமனை சம்மந்தப்பட்டஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஒசூரில் இருந்து இராயக்கோட்டை சென்று கெலமங்கலம் வரும் போது ஒன்னல்வாடி என்ற இடத்தில் விபத்து ஏற்பட்டது. நான் சென்ற திசைக்கு எதிர் திசையில் வந்த லாரி மோதியதாக தான் புகாரில் உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்து **16** நாட்கள் கழித்து தான் எனது சகோதரர் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். விபத்து நடந்து புகார் கொடுக்கும் வரை **16** நாட்கள் நான் மருத்துவமனையில் இருந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கவணக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்ட விபத்தை சரி செய்வதற்கு **16** நாட்கள் எடுத்துகொண்டு எனது சகோதரரை வைத்து நான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் இல்லை. குற்ற எண்.**217/2022 TIW.Hosur** காவல் நிலைய குற்ற எண் என்ன ஆனது என்று விசாரித்து நான் தெரிந்து கொள்ளவில்லை. அந்த குற்ற எண் **217/2022** ல் போலீசார் மேல் நடவடிக்கை எடுக்காமல் கைவிடப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. நான் ஆசிரியராக பணிபுரிவதற்கும் எனது மாத வருமானத்தை காட்டுவதற்கும் இவ்வழக்கில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு

ரூ.4 லட்சத்து 50 ஆயிரம் செலவானதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் லாரியை ஓட்டி வந்தவரை 2 வது எதிர்மனுதாரராக சேர்த்திருக்கிறேன் என்றால் சரிதான். 2 வது எதிர்மனுதாரருக்கு கனரக வாகனம் ஓட்டுவதற்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இந்த வழக்கில் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைக்கு உட்படுத்தும் போது நான் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயம் சரியாகிவிட்டது என்றும் எனக்கு வருமான இழப்போ, நிரந்தர ஊனமோ, செயல் திறன் குறைபாடோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்தானது எனது கவனக்குறைவால் ஏற்பட்டதால் நீதிமன்றம் இறுதிஉத்தரவில் கழித்து கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை 16 நாட்கள் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளதற்கு நான் காரணம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முறையான நேரத்தில் சிகிச்சை எடுத்திருந்தால் காயங்கள் எல்லாம் சரியாகி இருக்கும் என்றும், நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்திருந்தால் ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றும் நான் தாக்கல் செய்த மனு 3 வது எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**